DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.313/2023**

**prosecution witness: PW-6**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சிவா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>05.11.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். மீன்வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.2** ஆகும். அதை நான் நகர் காவல்நிலைய போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சத்யா நகரில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையில் கடந்த 16.03.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், கருப்பசாமி என்பவரும் சத்யா நகரில் உள்ள மஞ்சுளா என்பவர் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல, அந்த பார்வை மகஜரில் நானும், கருப்பசாமி என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.05 18:37:46 +0530

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.313/2023**

**prosecution witness: PW-7**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஜீத்குமார் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>05.11.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 ஆகும்.** அதை நான் நகர் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையில் கடந்த 16.03.2023 ம் தேதி நண்பகல் 12.00 மணியளவில் நானும், சோனை முத்து என்பவரும் இராமேஸ்வரம் சத்யா நகரில் நின்று கொண்டிருந்தபோது இராமேஸ்வரம் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆஜர் எதிரிகள் இருவரையும் எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி பால்பாண்டி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் நானும், சோனைமுத்து என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1ம் எதிரி அவரது வீட்டிற்கு பின்புறம் மணலில்

மறைத்து வைத்திருந்த கிரே கலர் லெனோவா லேப்டாப் ஒன்று, ஏஎம் என்று எழுதி ADMK கொடி போட்ட தங்க மோதிரம் ஆகியவற்றை 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் 1.45 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து போலீசார் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. அந்த அத்தாட்சியில் நானும், சோணைமுத்து என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.05 18:37:55 +0530